# புதுச்சேரி வீட்டுவசதி வாரியம்
# புதுச்சேரி – 605 005.

F.No. 5/PHB/EW.7/S.P. Nagar/LIG 64/D.R.2011 நாள்: 12.07.2013

**அடுக்குமாடி குடியிருப்புகள் விற்பனைக்கான அறிவிப்பு**

குறைந்த வருவாய் பிரிவினர்களுக்கான (LIG) அடுக்குமாடி வீடுகள் விற்பனைக்கான அறிவிப்பு
(SC/ST பிரிவினர்களுக்கு மட்டும்)

புதுவை வீட்டுவசதி வாரியம், சாரம் வருவாய் கிராமம், சுதந்திர பொன்விழா நகர் திட்டப்பகுதியில் (ரெயின்போ நகருக்கு அருகில்) லிப்ட் வசதியுடன் கூடிய **486 சதுர** அடி பரப்பளவில் நிலநடுக்கத்தை தாங்கும் திறன் கொண்ட குறைந்த வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் (L.I.G Flats) 3 (**இரண்டு வீடுகள் அரசு ஒதுக்கீட்டின்கீழ் உள்ளடங்கியது**) பொது குலுக்கல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்புகள் நான்கு தளங்களை உள்ளடக்கியதாகும். ஒரு வீட்டின் தோராய விலை **ரூ.10,34,700/-.** இறுதி விலை பின்னர் அறிவிக்கப்பட்டு ஒதுக்கீட்டாளர்கள் பாக்கித்தொகையை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வாரியத்தில் செலுத்தவேண்டும்.

இந்த அடுக்குமாடி வீடுகள் தற்போது நிலுவையில் உள்ள அரசு ஒதுக்கீட்டு விதிமுறைப்படி குலுக்கல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. அதன் விபரம் கீழ்வருமாறு:-

| Category | Reservation of Flats | Remarks |
|---|---|---|
| SC/ST | 1 | |
| **TOTAL** | **1** | |

அரசு ஒதுக்கீட்டின்கீழ் (**Govt. Quota**) இரண்டு வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைபெற்ற குலுக்கலில் கலந்துகொண்டு வீடு கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இந்த ஒதுக்கீட்டிற்காக புதுச்சேரி அரசை அனுகலாம். மேலும் வாரியத்திடமிருந்து டேவணித்தொகையை திரும்பப்பெறாதவர்கள் மட்டுமே இந்த அரசு ஒதுக்கீட்டிற்கு தகுதி உடையவர்களாவார்கள்.

**காலியாக உள்ள வீடுகளின் விபரம்:**

| Sl. No. | Block | Ist Floor | IInd Floor | IIIrd Floor | Total Vacant |
|---|---|---|---|---|---|
| 1 | 'B' Block | -- | Flat No. 10 | NIL | 1 Flat |
| 3 | 'E' Block | -- | Flat No.59 | Flat No.64 | 2 Flats |
| **T O T A L** | | | | | **3 Flats** |

மேற்குறிப்பிட்டுள்ள 1 அடுக்குமாடி வீடு அரசு ஒதுக்கீட்டு விதிமுறைப்படி குலுக்கல் மூலம் ST/ST பிரிவைச் சார்ந்தவர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. அவ்வாறு விற்பனை செய்வதற்கு புதுவை யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த ST/ST பிரிவினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தில் விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் புதுவை அண்ணா நகரில் உள்ள வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில், அலுவலக நாட்களில் **ரூ.300/-**ஐ செலுத்தி விண்ணப்பப் படிவத்தை 15.07.2013 முதல் 02.08.2013 வரை காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் டேவணித்தொகையாக **ரூ.1,03,470/-** வங்கி கேட்பு வரவோலையாக (**Demand Draft**) செலுத்தி அதற்குண்டான ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து 05.08.2013 அன்று மாலை 4.00 மணிக்குள் உரிய சான்றிதழ்களுடன் சமர்பிக்கவேண்டும்.

**உயர் வருவாய் பிரிவினர்களுக்கான (HIG) அடுக்குமாடி வீடுகள் விற்பனைக்கான அறிவிப்பு**

புதுவை வீட்டுவசதி வாரியம், சாரம் வருவாய் கிராமம், சுதந்திர பொன்விழா நகர் திட்டப்பகுதியில் (ரெயின்போ நகருக்கு அருகில்) லிப்ட் வசதியுடன் கூடிய **1478** சதுர அடி பரப்பளவில் நிலநடுக்கத்ததை தாங்கும் திறன் கொண்ட cah; வருவாய் பிரிவினருக்கான அடுக்குமாடி குடியிருப்புகள் (H.I.G Flats) 4 (1 **வீடு அரசு ஒதுக்கீட்டின்கீழ் உள்ளடங்கியது**) பொது குலுக்கல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்புகள் நான்கு தளங்களை உள்ளடக்கியதாகும். ஒரு வீட்டின் தோராய விலை **ரூ.34,57,500/-.** இறுதி விலை பின்னர் அறிவிக்கப்பட்டு ஒதுக்கீட்டாளர்கள் பாக்கித்தொகையை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் வாரியத்தில் செலுத்தவேண்டும்.

| Category | Reservation of Flats | Remarks |
|---|---|---|
| SC/ST | 1 | |
| Ex- Serviceman | **1** | |
| State Govt/ Corporate Bodies/ Local Bodies | **1** | |
| TOTAL | **3** | |

| Sl. No. | Block | Ist Floor | IInd Floor | IIIrd Floor | Total Vacant |
|---|---|---|---|---|---|
| 1 | 'A' Block | -- | | 7, 8 | 2 Flat |
| 3 | 'E' Block | -- | | 39,40 | 2 Flats |
| **T O T A L** | | | | | **4 Flats** |

அரசு ஒதுக்கீட்டின்கீழ் (**Govt. Quota**) xU வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே நடைபெற்ற குலுக்கலில் கலந்துகொண்டு வீடு கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இந்த ஒதுக்கீட்டிற்காக புதுச்சேரி அரசை அனுகலாம். மேலும் வாரியத்திடமிருந்து டேவணித்தொகையை திரும்பப்பெறாதவர்கள் மட்டுமே இந்த அரசு ஒதுக்கீட்டிற்கு தகுதி உடையவர்களாவார்கள். மேற்குறிப்பிட்டுள்ள 3 அடுக்குமாடி வீடுகள் அரசு ஒதுக்கீட்டு விதிமுறைப்படி குலுக்கல் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. அவ்வாறு விற்பனை செய்வதற்கு புதுவை யூனியன் பிரதேசத்தைச் சோந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இத்திட்டத்தில் விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் புதுவை அண்ணா நகரில் உள்ள வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில், அலுவலக நாட்களில் **ரூ.500/-**ஐ செலுத்தி விண்ணப்ப படிவத்தை 15.07.2013 முதல் 02.08.2013 வரை காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்ப படிவத்துடன் டேவணித்தொகையாக **ரூ.3,45,750/-/-** வங்கி கேட்பு வரவோலையாக (**Demand Draft**) செலுத்தி அதற்குண்டான ரசீதுயை விண்ணப்பத்துடன் இணைத்து 05.08.2013 அன்று மாலை 4.00 மணிக்குள் உரிய சான்றிதழ்களுடன் சமர்பிக்கவேண்டும்.

குலுக்கல் நடைபெறும் தேதி, இடம் மற்றும் நேரம் பற்றிய விபரங்கள் விண்ணப்பதாரர்களுக்கு வாரியத்தின் கடிதம் மூலம் தெரிவக்கப்படும். இதற்கான அனைத்து விபரங்களும் புதுச்சேரி வீட்டுவசதி வாரிய இணையதளம் www.phb.puducherry.gov.in மற்றும் www.pon.nic.in என்ற முகவரியிலும் தெரிந்துகொளள்ளலாம். மேலும் விபரம் வேண்டுவோர் இவ்வலுவலகத்தை அலுவலக நாட்களில் அனுகுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**( P. அகஸ்டின் லூாசியன் தியாகு )**
செயலர்

The System Analyst, PHB.
- with a request to publish the same in the official website of PHB & NIC